**செ.வெ.எண் -19** **நாள்:12.03.2018**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் 2017-2018ஆம் ஆண்டில் (Kharif Marketing System) காரீப் பருவத்தில் நடைபெறும் அறுவடையை முன்னிட்டு விவசாயிகள் பயன்பெறும் வகையில் 4 நேரடி நெல் அறுவடை கொள்முதல் நிலையங்கள், அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டத்தில் **கீழக்கொளத்தூர், இலந்தைகூடம், கரைவெட்டி, கள்ளூர்** ஆகிய நான்கு கிராமங்களில் திறப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நேரடி கொள்முதல் நிலையங்கள் **12.03.2018** முதல் பயன்பாட்டிற்கு வர உள்ளது. எனவே, விவசாய பெருமக்கள், அருகில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை பயன்படுத்தி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**